இந்திய அரசியலமைப்பு

பகுதி – 3

வேற்றுமையில் ஒற்றுமை

1. பல இனங்களின் அருங்காட்சியகம் --- இந்தியா.
2. மனித இனங்களின் அருங்காட்சியகம் என அழைக்கப்படுவது? இந்தியா.
3. இந்தியாவின் பழமையான மதம் --- வேத சமயமாகும்.
4. கிருஸ்துவ மதமானது இந்தியாவில் யாரால் கொண்டுவரப்பட்டது? ஏசுவின் சீடர் புனித தாமஸ் என்பவரால் (கி.பி.1 ஆம் நூற்றாண்டில்).
5. இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை --- 845 மொழிகள்.
6. இந்தியாவில், இந்திய அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் மொத்தம் --- 22 மொழிகள்.
7. இந்தியாவின் அலுவலக மொழி --- தேவநாகிரி வடிவ இந்தி எழுத்து.
8. இந்தியாவின் அலுவலக இணைப்பு மொழி --- ஆங்கிலம்.
9. மொழி என்பது ஒரு --- இணைப்புக் கருவி.
10. இந்தியாவின் இரு பெரும் இதிகாசங்கள் --- இராமாயணமும், மகாபாரதமும்.
11. தமிழின் மிகச்சிறந்த நூல் --- திருக்குறள்.
12. இந்துக்களின் புனித நூல் --- பகவத் கீதை.
13. உமறுப்புலவர் எழுதிய ‘சீறாப்புராணம்’ --- இறைத் தூதர் முகமது நபிகளின் வாழ்க்கையை கூறுகிறது.

14. வீரமாமுனிவர் இயற்றிய 'தேம்பாவனி' கிருத்துவ மதத்துடன் தொடர்புடையது ("கிருஸ்துவ சமயத்தாரின் கலைக் களஞ்சியம்").
15. சமய விழாக்கள் மக்களிடையே --- சகோதரத்துவத்தையும், நட்பையும், சமய சகிப்புத் தன்மையையும் வளர்த்து வருகின்றது.
16. உலகப் புகழ்பெற்ற இந்திய ஓவியங்கள் --- அஜந்தா, எல்லோரா.
17. இந்தியாவின் சிற்பக் கலையின் சிறப்பை எடுத்து உரைப்பது --- காந்தாரக்கலை.
18. கர்நாடகம், இந்துஸ்தானி இசைப்பாணி --- இந்தியவை பிறப்பிடமாகக் கொண்டது.
19. "தேசிய ஒருமைப்பாடு தினம்" --- நவம்பர் - 19.
20. கி.பி. 1956 ஆம் ஆண்டு இந்தியா எதன் அடிப்படையில் பல மாநிலங்களாக பிரிக்கப்பட்டது? --- மொழி அடிப்படையில்.
21. கூற்று: இந்தியா சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து பல்வேறு சமூகப் பிரச்சனைகளை சந்தித்து வருகிறது.

    காரணம்: அவற்றில் முக்கியமானவை எழுத்தறிவின்மை, குழந்தை தொழிலாளர்கள் பிரச்சனை, பெண்களுக்கு எதிரான அநீதிகள் போன்றவையாகும்.
22. நாட்டின் வளார்ச்சியை நிர்ணயம் செய்யும் காரணிகள் --- எழுத்தறிவு அளவு, மற்றும் கல்வி வளர்ச்சி.
23. குழந்தை தொழிலாளர்கள் பிரச்சனைகள், பெண் சிசுக் கொலை, மக்கள் தொகை பெருக்கம் போன்ற சமூகப் பிரச்சனைகளுக்கு காரணமானது எது? எழுத்தறிவின்மை.

24. “தாய்மொழி மூலம் கல்வி கற்பது எழுத்தறிவு அளவினை உயர்த்தும்” என கூறியது? --- பல்கலைக் கழக மானியக் குழு (1948 - 1949 ஆம் ஆண்டு).
25. நாடு முழுவதும் ஒரே மாதிரியான கல்விக் கொள்கை (10 +2 +3) --- 1968.
26. தேசிய கல்விக் கொள்கை - 1986 --- ஆரம்பக் கல்வி கட்டாயம் ஆக்கப்பட்டது.
27. 1991 ஆம் ஆண்டு பேராசிரியர் தாவே அறிமுகப்படுத்திய குறைந்தபட்ச கற்றல் அளவு (MLL) மூலம் ஆரம்பக் கல்வி வளர்ச்சி அடைந்துள்ளது.
28. 1992 ஆம் ஆண்டின் தேசிய கல்விக் கொள்கை --- “கரும்பலகை திட்டம்” மூலம் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகளை செய்துத்தருதல்.
29. அனைவருக்கும் கல்வி இயக்கம், சர்வ சிக்ஷா அபியன் (SSA) --- ஆரம்பக் கல்வி திட்டத்தோடு தொடர்புடையது.
30. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின் படி தமிழ்நாட்டின் எழுத்தறிவு சதவீதம்? 80.33%.
31. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின் படி தமிழ்நாட்டின் ஆண்கள் எழுத்தறிவு சதவீதம் --- 86.81%.
32. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின் படி தமிழ்நாட்டின் பெண்கள் எழுத்தறிவு சதவீதம் --- 73.86%.
33. ஐக்கிய நாடுகள் சபை எந்த ஆண்டினை “பன்னாட்டு எழுத்தறிவு வருடமாக” அறிவிதுள்ளது? --- 1990.

34. “உலக எழுத்தறிவு தினம்” என்று கடைபிடிக்கப்படுகிறது? செப்டம்பர் - 08.
35. தொழிற்சாலைகளில் பணிபுரியும் 14 வயதுக்குட்பட்டவர்கள் --- குழந்தை தொழிலாளர்கள்.
36. உலகிலேயே அதிக குழந்தை தொழிலாளார்கள் உள்ள நாடு? இந்தியா.
37. இந்தியாவில், 1991 ஆம் ஆண்டு கணக்கின் படி 11.29 மில்லியன் குழந்தை தொழிலாளர்கள் உள்ளனர் (இந்திய மக்கள் தொகையில் 1.34%).
38. குழந்தை தொழிலாளர்கள் எதனால் உருவாகிறார்கள்? முறையான உணவு, உடை, கல்வி, இருப்பிடம் ஆகியனவை இல்லாத காரணத்தால்.
39. 1949 ஆம் ஆண்டு ‘குழந்தைகள் பணி சட்டத்தின்படி’ குழந்தைகள் பணிபுரிய 14 வயது நிறம்பி இருக்க வேண்டும் (17 வயதாக மாற்றப்பட்டது).
40. 1951 ஆம் ஆண்டு ‘தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்’ படி 12 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் தோட்டத்தொழிலில் பணி அமர்த்தப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது.
41. 1986 ஆம் ஆண்டு குழந்தை தொழிலாளர் சட்டத்தின் படி, தொழிற்சாலைகளிலும், சுரங்கங்களிலும் பணிபுரிய 14 வயது நிரம்பியிருக்க வேண்டும்.

42. 1987 ஆம் ஆண்டு 'தேசிய குழந்தை தொழிலாளர் கொள்கை' --- குழந்தை தொழிலாளர் முறை ஒழிக்கப்பட்டது, குழந்தை தொழிலாளர்களுக்கென பிரத்யோக பள்ளிகள் உருவாக்கப்பட்டன.
43. இந்தியாவின் முன்னாள் பிரதமர், இந்திரா காந்தி அவர்களால், 1976 ஆம் ஆண்டு 'கொத்தடிமை தொழிலாளர் ஒழிப்பு சட்டம்' கொண்டுவரப்பட்டது.
44. வட்டார ஏற்றத்தாழ்வுகளுக்கு காரணமாக அமைவது எது? வறுமை, வேலையில்லா திண்டாட்டம், குறைவான வாழ்க்கைத் தரம், குறைவான தனி நபர் வருமானம்.
45. வட்டார ஏற்றத்தாழ்வுகள் --- தேசிய ஒருமைப் பாட்டை பாதிக்கிறது.
46. "வறுமை என்பது குறைந்தபட்ச வாழ்வு நிலையை அடைய இயலாத நிலமைமை ஆகும்" இது யாருடைய கூற்றாகும் --- உலக வங்கி.
47. மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதி மக்கள் வறுமை கோட்டிற்கு கீழே உள்ளனர்.
48. வறுமையிற்கான காரணங்கள்? மக்கள் தொகை பெருக்கம், மக்களின் குறைவான வருமானம், விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம், எழுத்தறிவின்மை.
49. முதலாவது ஐந்தாண்டு திட்டம் --- 1951 - 1956.
50. முதலாவது ஐந்தாண்டு திட்டம் (1951 - 1956) நோக்கம்? விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளித்து உணவு பற்றாக்குறையை போக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

51. நான்காவது ஐந்தாண்டு திட்டம் --- 1969 - 1974 மக்கள் வாழும் நிலையை உயர்த்தவும், விலைவாசியினை குறைக்கவும் வழிவகை செய்யப்பட்டது.
52. ஐந்தாவது ஐந்தாண்டு திட்டம் --- 1974 - 1979 வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
53. ஏழாவது ஐந்தாண்டு திட்டம் --- 1985 - 1990 உணவு உற்பத்தியில் சுயசார்பு நிலையை உருவாக்கி வறுமையை ஒழிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
54. பத்தாவது ஐந்தாண்டு திட்டம் --- மக்களின் தனி நபர் வருமானத்தை இரட்டிப்பாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
55. இந்திய அரசின் 'ஜவஹர் ரோஜ்கர் யோஜனா திட்டம்' (JRY) --- 1989 ஆம் ஆண்டு வேலையற்றோருக்கான வேலைவாய்ப்பு திட்டம், வறுமை ஒழிப்போடு தொடர்புடைய திட்டம்.
56. முன்னாள் பிரதமர் திருமதி. இந்திரா காந்தி அவர்களால் அறிமுகம் செய்யப்பட்ட திட்டம் --- 20 அம்ச திட்டம் (கிராமப் புறங்களில் வறுமை ஒழிப்பு).
57. பணிபுரிய விருப்பமும், உடல் தகுதியும் இருந்தும் வெலை வாய்ப்பின்றி இருத்தல் --- வேலையில்லா திண்டாட்டம்.
58. தேசிய கிரமப்புற வேலை வாய்ப்புத்திட்டம் (NREP) --- 1980.
59. 'கிராமப்புற வேலை வாய்ப்பு உத்திரவாத திட்டம்' (RLEG) --- 1983 வருடத்தில் குறைந்தபட்சம் 100 நாட்களுக்கான வேலை வாய்ப்பு உத்திரவாதம்.

60. 1979 ஆம் ஆண்டு 'கிராமப்புற இளைஞர் வேலை வாய்ப்புத் திட்டம்' --- இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டு சுய வேலைவாய்ப்பிற்கு வழி வகுத்தது.
61. அத்யாவசிய பொருட்களிகளின் விலை உயர்வை தடுக்க அரசு கொண்டு வந்துள்ள திட்டம் --- பொது வினியோக திட்டம் (Public Distribution Scheme (PDS)).
62. எதிர்பாராத விதமாக ஏற்படும் மக்கள் தொகை வளர்ச்சி --- மக்கள் தொகை பெருக்கம்.
63. உலக மக்கள் தொகையில் இந்தியா இரண்டாமிடம்.
64. உலக மக்கள் தொகையில் இந்தியா 16.84% பெற்றுள்ளது.
65. உலக மக்கள் தொகை தினம் --- ஜூலை - 11.
66. பிரகதீஸ்வரர் ஆலயம் உள்ள இடம்? தஞ்சாவூர்.
67. சீக்கியர்கள் கொண்டாடும் பண்டிகை --- குருநானக் ஜெயந்தி.